முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1135

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.11.2022, திங்கட்கிழமை

1. அருட்சுடரே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
இருள் நீக்கி உலக மக்களை மீட்க
ஏழாம் படை வீடு படைத்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 21 ம் நாள் 07.11.2022 திங்கட்கிழமை)
ஊழ் போக்கி உலகோரை மீட்க
உலகத்தில் அவதாரம் எடுத்த ஞானியே
3. ஞானியே உன்னுள் யானிருந்து
நாட்டிடுவேன் உலகோர்க்கு அருள்புரிய
கனிவேலவன் என் தயவுபெற எண்ணும் மக்கள்
கருணைமிக்க அரங்கன் தொடர்பு கூட்டி
4. கூட்டியே ஓங்காரக்குடில் தன்னில்
குறையில்லா ஞான அருளமுது உண்டு
தட்டாது அரங்கன் உபதேசத்தோடு
தவ தீட்சை அடைந்து இனிதே உலகில்
5. உலகிலே ஞானம் பயில
உயர்வான தர்மத்தை கைக்கொள்ள
தயவான வாழ்வாய் அவரவர்க்கும்
தணிகாசலன் என் ஆசியோடு இனிதே
6. இனிதே வருமுலகில் ஞானசித்தி
இனி பிறவாத பெரும்பேற்றுக்குண்டான ஜீவமுக்தி
தடையற உலகோர் நன்றடைந்து
தவராஜன் அரங்கனால் மேன்மை காண்பர்
7. காணவே அரங்கனுள் அற்புதத்தை
கலியுகத்தில் ஆறுமுகன் யான் நடத்தி வருகின்றேன்
ஆன்மீக ஞானவழி ஆங்காங்கே
அலைந்து திரிந்து அவதியுறும் மக்கள்
8. அவனியில் அரங்கன் குடில் நாடி
அவசியம் சடாட்சர தீட்சை ஏற்று
தீட்சை பெற்று அரங்கா முருகா என
தொடர்ந்து ஜெபதபங்கள் முழங்க தர்மத்தை

9. தர்மத்தை தயவாக செய்து வந்தால்
தட்டாது அவர்களுக்கெல்லாம் கலியுகத்தில்
தீர்க்கமுடன் ஞான சித்தி உறுதியாகும்
தேசிகன் மூலம் ஞானியாகும் வாய்ப்பும் கிட்டும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–